**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006**
**ந.க.எண். 42212 /பிடி1/இ2/2012 நாள்.21.06.2012**

பொருள் : - பள்ளிக் கல்வி – மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் 14.06.2012 அன்று நடைப்பெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கலந்துக் கொண்டமைக்கான அறிவுரைகள் வழங்கியதனை அனைத்து பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்திட கோருதல் – சார்ந்து.

பார்வை : - சென்னை–9, பள்ளிக் கல்வித்துறை, அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் நேர்முக கடித எண்.20885/இ2/2012–1, நாள்.18.06.2012.

---

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் 14.06.2012 அன்று நடைப்பெற்ற அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பின்வரும் அறிவுரைகளை அனைத்து பள்ளிகளிலும் கடைபிடிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறாார்கள்.

**அறிவுரைகள்**

1. அனைத்து பள்ளிகளும் உரிய நேரத்தில் தொடங்கப்பட வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள் சுத்தமாகவும், நேரம் தவறாமலும் பள்ளிக்கு வருகை புரிய வேண்டும், மாணவர்கள் தினமும் சுத்தமாக சீருடை அணிந்து வரவேண்டும். தலைமையாசிரியர்கள் பள்ளி வளாகத்தை தூய்மையாக பராமரிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசால் வழங்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளும் மாணவர்களுக்கு உரிய காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதனை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் இதனை உறுதி செய்யப்பட வேண்டும்.
3. தரமான கல்வியை வழங்க மாணவர்களை ஊக்குவிக்கப்பட வேண்டும்.
4. பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு பசுமையாக வைத்திருக்கப்பட வேண்டும்.
5. மாணவர்களின் கற்கும் திறனை கண்காணித்து அதற்கேற்ப திட்டங்களை வகுத்து ஒவ்வொரு மாணவனின் கற்கும் திறனை மேம்படுத்துதல் வேண்டும்.

எனவே, மேற்கண்ட அறிவுரைகளை அனைத்து பள்ளித் தலைமையாசிரியருக்கும் உடன் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

www.TeacherTN.com

இச்செயல்முறைகளை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் வழங்குமாறு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**//பள்ளிக் கல்வி இயக்குநருக்காக//**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் /
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள்,
பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
(தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது)
2. இயக்குநர்,
தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
(தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைக்கப்படுகிறது)
3. இயக்குநர்,
மெட்ரிக் பள்ளி இயக்ககம், சென்னை–6.
(தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைக்கப்படுகிறது)
4. ஆய்வாளர்,
ஆங்கிலோ இந்தியன் பள்ளி, சென்னை–6.
(தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைக்கப்படுகிறது)

www.TeacherTN.com